1992 ஏப்ரல் 7] [பேரவைத் தலைவர்]

''கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 26 ஆம் எண் மானியக்கோரிக்கையின் கீழ் ரூ. 60,32,77,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. ஆம்

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்,

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-4-1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

54. ஸ்தர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ் ஆங்கிலம்).

55. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (1990–91 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ்—ஆங்கிலம்).

56. தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் 1989-90–ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்),